இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

ஆசிரியர் கல்வியில் முதுகலைமாணி - பகுதி 11

இறுதிப் பரீட்சை - 2006

**ESP** 2261 - கல்வித் தொழினுட்பம் கற்பித்தல் முறை, தொடர்பாடல் திறன்கள்

காலம் 03) மணித்தியாலங்கள்

திகதி: 27.02.2006 நேரம்: மு.ப 10.00 - பி..ப 1.00 வரை

மூன்று(03) வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
ஒவ்வொரு விடையும் வெவ்வேறு புத்தகத்தில் எழுதப்படல் வேண்டும்.

01. (i) 'கல்வித் தொழினுட்பத்தை' வரைவிலக்கணப்படுத்தி, அது 'கல்வியில் தொழினுட்பம்' என்பதிலிருந்து எவ்வாறு வேறுபடுகின்றது என்பதை விளக்குக.

(30 புள்ளிகள்)

(ii) தொழினுட்பத்தால் போஷிக்கப்பட்ட கற்றல் சூழலை(Technology enhanced learning environment) உருவாக்குகையில் கருத்திற் கொள்ளவேண்டிய மூன்று காரணிகளை விவரிக்குக.

(30 புள்ளிகள்)

(iii) கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் புதிய தொழினுட்பங்களை ஒன்றிணைக்க முயற்சிக்கையில் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் நான்கு சவால்களை விபரிக்குக.

(40 புள்ளிகள்)

02. (i) 'தொடர்பாடல் செயன்முறை' என்பதனை விளக்குக. (30 புள்ளிகள்)

(ii) நீங்கள் கற்றுக்கொண்ட தொடர்பாடல் மாதிரிகள் (Communication Models) மூன்றினைக் கருத்திற் கொண்டு, தொடர்பாடல் செயன்முறையை விளங்கிக்கொள்ள ஒருவருக்கு தொடர்பாடல் மாதிரிகள் எவ்வாறு உதவுகின்றன என்பதனைச் சுருக்கமாக ஆராய்க.

(40 புள்ளிகள்)

(iii) 'ஆசிரியர் பயிற்றுநருக்கு(Teacher educator) தொடர்பாடல் மாதிரிகள் பற்றிய அறிவு முக்கியமானதாகும்' பொருத்தமான உதாரணங்கள் தந்து ஆராய்க.

(30 புள்ளிகள்)

03. (i) கற்றலை நோக்கிய கட்டியெழுப்புதல் அணுகு முறைக்கு (Constructivist Approach) ஆதரவாக விளங்கும் இரண்டு கற்பித்தல் முறைகளை விவரிக்குக.

(30 புள்ளிகள்)

(ii) கற்பித்தல் மூலமான கற்றற் சூழலுக்கு எதிர்மாறாக(Instructivist learning environment) கட்டியெழுப்புதல் கற்றற் சூழலில்(Constructivist learning environment)கற்பவரிடம் அவதானிக்கக்கூடிய நான்கு பண்புகளை விளக்குக.

(40 புள்ளிகள்)

(iii) கட்டியெழுப்புதல் கற்றற் சூழலில் தொழினுட்பத்தின் வகிபங்கு யாது?

(30 புள்ளிகள்)

04. (i) விடய உள்ளடக்கத்தைக் கொண்ட சுயகற்றல் சாதனத்திற்கும் (Text based self learning material) கட்புல - செவிப்புல சாதனத்திற்குமிடையே உள்ள பலம், பலவீனங்களை ஒப்பிடுக.

(30 புள்ளிகள்)

(ii) கற்றல் வளங்களாக கல்வித் தொலைக்காட்சி, கற்பித்தல் வீடியோ என்பவற்றின் அனுகூலங்களையும் வரையறைகளையும் சுருக்கமாக ஆராய்க.

(30 புள்ளிகள்)

(iii) வகுப்பறைக் கற்றல் கற்பித்தலில் பயன்படுத்தப்படும் செவிப்புல நாடாக்கள் (audio casettes) மற்றும் வானொலி நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றின் பண்புகளையும் தொழிற்பாடுகளையும் (functions) விவரிக்குக.

(40 புள்ளிகள்)

05. (i) கணினித் தொழினுட்பத்திலிருந்து கற்பதைவிட கணினித் தொழினுட்பத்துடன் எவ்வாறு கற்றுக் கௌ்கின்றார்கள் என்பதை உதாரணங்களுடன் விளக்குக.

(30 புள்ளிகள்)

(ii) பயிற்றுநர்(educator) ஒருவரது வாண்மைக்குரிய செயற்பாடுகளுக்கு உதவும் வகையில் இணையத்தில் உள்ள நான்கு சேவைகளை விவரிக்குக.

(40 புள்ளிகள்)

(iii) நேரடித் தொடர்பாடலின்(online communication) மூன்று வகைகளைக் குறிப்பிட்டு, இவற்றுள் ஒன்று மாணவரிடையே சேர்ந்து கற்றலுக்கு (Collaborative learning) எவ்வாறு உதவுகின்றதென்பதை விளக்குக.

(30 புள்ளிகள்)

(06) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்று(03) பற்றிச் சிறு குறிப்புகள் எழுதுக.

(i) தகவல் மூலாதாரமாக இணையத்தின் பலம்களும் வரையறைகளும்
(ii) கற்பித்தல் வீடியோவின் தயாரிப்பு மாதிரிவடிவுகளும் (Production formats) வகுப்பறைக்கற்பித்தலில் அவற்றின் பொருத்தப்பாடும்.
(iii) கற்றல் செயன்முறையில் இடைவினைத்தொடர்பு கொண்ட பல்லூடகத்தின்(Interactive multi-media) பங்களிப்பு
(iv) தொழினுட்பக் கருவிகளின் பாதுகாப்பு பிரச்சினைகளும் அவற்றைப் பேணுதலும்.
(v) கற்றல் கற்பித்தல் முறையென்றினைத் தெரிவு செய்வதில் பிரதானமாகக் கருத்திற் கொள்ளப்பட வேண்டியவை.

(ஒவ்வொன்றிற்கும் 33 1/3 புள்ளிகள்)

(பதிப்புரிமையுடையது)